# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:-5** **தேதி:-09.06.2017**

**நவம்பர் புரட்சியின் நூற்றாண்டு கருத்தரங்கம்**

அன்பார்ந்த தோழர்களே,

சென்னையில் நடைபெற்ற 8வது அகில இந்திய மாநாட்டு தீர்மானத்தின் அடிப்படையில் நமது அகில இந்திய சங்கம் ஜூன் 9ஆம் தேதியன்று திருவனந்த புரம் VJT ஹாலில் நவம்பர் புரட்சியின் நூற்றாண்டு கருத்தரங்கத்தை நடத்தியது. அகில இந்திய தலைவர் தோழர் பல்பீர்சிங் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த கருத்தரங்கத்திற்கு வந்தவர்களை வரவேற்புக் குழுவின் தலைவரும், CITU செயலாளருமான தோழர் சிவன் குட்டி வரவேற்றார்.

இந்தக் கருத்தரங்கத்தில் தோழர் CITU சங்கத்தின் அகில இந்திய துணைத்தலைவர் தோழர் A.K.பத்மநாபன், CITU கேரள மாநிலச் செயலாளர் தோழர் எளமறம் கரீம், நமது பொதுச் செயலாளர் தோழர் P.அபிமன்யு, மற்றும் BSNL ஊழியர் சங்கத்தின் முன்னாள் பொது செயலாளர் தோழர் V.A.N.நம்பூதிரி ஆகியோர் கலந்துக் கொண்டு சிறப்புரையாற்றினார்கள். அவர்கள் தங்கள் உரையில் நவம்பர் புரட்சியின் விளைவாக மூன்றாம் உலக நாடுகள் பல விடுதலையடைந்ததை பற்றியும், நமது இந்திய நாடு சுதந்திரம் அடைந்த போது நமது நாட்டின் வளர்ச்சிக்கு ஏகாதிபத்திய நாடுகள் உதவாத போது நவம்பர் புரட்சியின் விளைவாக பிறந்த சோவியத் யூனியன் அனல் மின்நிலையங்களையும், புனல் மின் நிலையங்களையும், எஃகு, இரும்பு உருக்கு ஆலைகளையும், பல்வேறு அணைக்கட்டுகளையும் நிர்மாணிப்பதற்கும், மேம்படுத்தவும், உதவியதையும் தெளிவாக எடுத்துரைத்தனர். நவம்பர் புரட்சியின் விளைவாக உலகம் முழுவதும் உள்ள உழைக்கும் மக்கள் பெற்ற சமூக நலத்திட்டங்கள் பற்றி தலைவர்கள் உதாரணங்களோடு எடுத்துரைத்தனர். மேலும் சோவியத் யூனியனில் இரண்டு கோடி செம்படை வீரர்கள் தங்களின் இன்னுயிரை ஈந்து முசோலினியின் பாசிசத்திலிருந்தும், ஹிட்லரின் நாஜியிசத்திலிருந்தும் உலக மக்களை காப்பாற்றிய தேசபக்த போராட்டத்தை விவரித்து பேசினர். உலகம் முழுவதும் தொழிலாளி வர்க்கத்தின் ஆதர்ச சக்தியாக திகழ்ந்த சோவியத் யூனியனின் வீழ்ச்சியை தொடர்ந்து உலக தொழிலாளி வர்க்கமும், ஏழை எளிய மக்களும் இன்று பெரும் சிரமத்திற்கு உள்ளாகி வருவதையும் தெளிவாக தெரிவித்தனர். இந்திய நாட்டில் நாம் இன்று சந்தித்து வரும் சவால்களையும் அதனை எதிர்த்து நாம் போராட வேண்டிய அவசியம் குறித்தும் அவர்கள் நமக்கு அறிவுறுத்தினர். ஒட்டு மொத்தத்தில் நவம்பர் புரட்சியின் விளைவாக உருவான சோவியத் யூனியன் இன்று மறைந்து போனாலும், அது உலக மக்களுக்கு விட்டுச் சென்ற பாடங்களை தொழிலாளர்களாகிய நாம் புரிந்து உழைக்கும் மக்களுக்கான உலகை படைப்பதற்கு தயாராவோம் என்ற உறுதியினை நமக்கு விதைத்தனர் என்றால் அது மிகையாகாது. இந்த கருத்தரங்கத்தில் கலந்துக் கொண்ட அனைவருக்கும் வரவேற்புக் குழுவின் பொது செயலாளரும், BSNL ஊழியர் சங்கத்தின் கேரள மாநில செயலாளருமான தோழர் K.மோகனன் நன்றி கூறி இந்த கருத்தரங்கை நிறைவு செய்தார்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

(A.பாபு ராதாகிருஷ்ணன்)
மாநிலச் செயலாளர்




தோழர் P.அபிமன்யு




தோழர் A.K.பத்மநாபன்




தோழர் எளமறம் கரீம்




தோழர் V.A.N. நம்பூதிரி




தோழர் பல்பீர் சிங்




தோழர் K.மோகனன்





பார்வையாளர்கள்